# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## September 4, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாட்டின் பிராந்திய விமான சேவை நிறுவனமான 'ஃப்ளை91', 100 கோடி டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.9,456 கோடி) மதிப்பிலான 40 புதிய 'ஏடிஆர் 72-600' ரக விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டது. உலக அளவில் ஒரு பிராந்திய விமான நிறுவனம், ஏடிஆர் நிறுவனத்துக்கு வழங்கிய மிகப் பெரிய ஒற்றை கொள்முதல் ஒப்பந்தம் இதுவாகும். தில்லியில் நடைபெற்ற ஒப்பந்தம் கையொப்பமிடும் நிகழ்வில் மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.ராம்மோகன் நாயுடு, ஏடிஆர் நிறு வன சிஇஓ நத்தாலி தர்னாட் லாட், ஃப்ளை91 தலைவர் ஹர்ஷா ராகவன் மற்றும் சிஇஓ மனோஜ் சாக்கோ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.
   i. கோவாவைத் தலைமையிடமாகக் கொண்டு, கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேல் செயல்பட்டு வரும் ஃப்ளை91 நிறுவனம், தற்போது 6 'ஏடிஆர் 72-600' விமானங்களுடன் வாரம் 280-க்கும் மேற்பட்ட விமான சேவைகளை வழங்கி வருகிறது.
   ii. பாகிஸ்தான் போர்விமானத்தை வீழ்த்தி 'வீர் சக்ரா' விருது பெற்ற இந்திய விமானப் படையின் முன்னாள் குரூப் கேப்டன் அபிநந்தன் வர்தமான், ஓய்வைத் தொடர்ந்து ஃப்ளை91 நிறுவனத்தில் விமானியாக இணைந்துள்ள தகவல் அண்மையில் வெளியானது குறிப்பிடத்தக்கது.

2. இந்தியாவின் அடுத்த 10 ஆண்டுகளுக்கான பாதுகாப்பு ராஜதந்திரத்தின் விரிவான வியூக செயல்திட்டத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார்.
   i. 'ரக்ஷா' என்ற பெயரிலான இந்த வியூக செயல்திட்ட ஆவணத்தில், அடுத்த 10 ஆண்டுகளில் உலக நாடுகளுடன் இந்தியா மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஒத்துழைப்பு இலக்குகள் உள்ளிட்ட பல்வேறு வியூக நடவடிக்கைகளுக்கான திட்டங்களும் இடம்பெற்றுள்ளன. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
   - புது தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த வியூக செயல்திட்ட ஆவணத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் வெளியிட்டார்.

- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் பாதுகாப்பு ராஜதந்திரம் முக்கியத் தூணாக விளங்குகிறது. அந்த வகையில், மாறிவரும் உலகச் சூழலில், அமைதி, ஸ்திரத்தன்மை, சட்டத்தின் அடிப்படையிலான ஒழுங்குமுறை ஆகியவற்றின் மையத் தூணாக இந்தியா தொடர்ந்து திகழ்வதை உறுதிப்படுத்துவதற்கான தொலைநோக்குத் திட்டத்தை இந்த செயல்திட்ட ஆவணம் வழங்குகிறது.
- நாட்டின் ராஜீய ஈடுபாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தி, உலகளாவிய ஒத்துழைப்புடன் தேசிய பாதுகாப்பு நோக்கங்களை ஒருங்கிணைத்து, நீண்ட கால ஸ்திரத்தன்மையையும், பரஸ்பர வளர்ச்சியையும் ஊக்குவிக்குவிப்பதை இச்செயல்திட்டம் குறிக்கிறது.
- முக்கியமாக, அடுத்த 10 ஆண்டுகளில் உலக நாடுகளுடன் இந்தியா மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஒத்துழைப்பு இலக்குகள், வியூக கூட்டுறவு, திறன் மேம்பாடு, உள்நாட்டு உற்பத்தி ஏற்றுமதி, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு வியூக நடவடிக்கைகளுக்கான திட்டங்களும் இடம்பெற்றுள்ளன.
- வியூக கூட்டுறவின் கீழ், உலக நாடுகளுடன் இருதரப்பு மற்றும் பன்முக பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இலக்குகள் இடம்பெற்றுள்ளன. திறன் மேம்பாட்டின் கீழ், கூட்டு ராணுவப் பயிற்சியை விரிவுபடுத்துவது, பாதுகாப்புப் பயிற்சித் திட்டங்கள், சிறந்த பாதுகாப்பு நடைமுறைகளை நட்பு நாடுகளுடன் பகிர்தல் உள்ளிட்ட இலக்குகள் இடம்பெற்றுள்ளன.
- இந்தியாவை நம்பகமான உளகளாவிய பாதுகாப்பு தளவாட உற்பத்தி முனையமாக உருவாக்கி, முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்படும் தளவாடங்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதை 'உள்நாட்டு உற்பத்தி ஏற்றுமதி' திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.
- அதுபோல, கடல்சார் பாதுகாப்பைப் பொறுத்தவரை, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பு மற்றும் அவசரகால உதவியை வழங்குவதில் முன்னணி நாடாக இந்தியாவை வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

3. மூன்று நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வந்துள்ள பெல்ஜியம் பிரதமர் பார்ட் டே வேவர், தில்லியில் பிரதமர் மோடியுடன் விரிவான இருதரப்பு

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அப்போது, வர்த்தகம், பாதுகாப்பு, முக்கிய கனிமங்கள், தூய எரிசக்தி, தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த இரு நாடுகளும் உறுதிபூண்டன.

i. இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே இறுதி செய்யப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் முக்கிய மைல்கல்லாகும். இந்தியாவும், பெல்ஜியமும் இதுவரை இல்லாத பரந்த-வலுவான உத்திசார் உறவை கட்டமைத்து வருகின்றன என்று பெல்ஜியம் பிரதமர் வேவர் தெரிவித்தார்.

- இந்தியாவும் பெல்ஜியமும் 3 நூற்றாண்டுகளுக்கும் மேலான வரலாற்றுத் தொடர்புகளைக் கொண்டுள்ளன.
- கடந்த 1947-இல் சுதந்திர இந்தியாவுடன் தூதரக உறவுகளை ஏற்படுத்திய முதல் ஐரோப்பிய நாடுகளில் பெல்ஜியமும் ஒன்றாகும்.

ii. வர்த்தகத்தை இரு மடங்கு அதிகரிக்க முடிவு:

- 2025-26 ஆம் ஆண்டில் இருதரப்பு வர்த்தகம் 13 பில்லியன் டாலர்களை (ரூ.1.22 லட்சம் கோடி) எட்டியது. இதை அடுத்த 5 ஆண்டுகளில் இரு மடங்கு உயர்த்த பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்டது.
- கடந்த 2000 முதல் 2025 வரை பெல்ஜியத்தில் இருந்து இந்தியாவுக்கு கிடைக்கப் பெற்ற அந்நிய நேரடி முதலீடு சுமார் 4.2 பில்லியன் டாலர்கள் (ரூ.39.698 கோடி) என்பது குறிப்பிடத்தக்கது.

4. இந்திய பொருளாதார வளர்ச்சி குறித்து விமர்சகர்கள் கூறும் கருத்து தவறானது என உலக வங்கியின் நிர்வாக இயக்குநர் நீலகண்ட் மிஸ்ரா தெரிவித்தார்.

i. முன்னதாக, மத்திய அரசு வெளியிட்ட தரவுகளில், 'இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி), நடப்பு 2026-27 நிதியாண்டின் ஏப்ரல்- ஜூன் காலாண்டில், 7.8 சதவீதமாக வளர்ச்சியுடன் நிலையான விலையிலான உண்மையான ஜிடிபி ரூ.81.36 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்தில் ரூ.75.46 லட்சம் கோடியாக இருந்த நிலையில், தற்போது 7.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

ii. மத்திய அரசின் நிதிசார் மற்றும் ரிசர்வ் வங்கியின் பணவியல்சார் தடைகள் குறைவதால் எதிர்பார்த் ததைவிட பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது. நடுநிலையான நிதி மற்றும் பணவியல் கொள்கையால் பொருளாதாரம் 7.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்யும். ஜிடிபி கணக்கிடுவதற்கான

அடிப்படை ஆண்டை 2011-12- இல் இருந்து 2022-23-ஆக மாற்றி கடந்த பிப்ரவரி மாதம் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. இது கணக்கிடும் முறையை சீராக்கியதோடு நம்பகத்தன்மையை அதிகரித்துள்ளது.

5. தமிழகத்தில் உலகத்தரத்துடன் கூடிய மோட்டார் விளையாட்டு நகரம் (மோட்டார் ஸ்போர்ட்ஸ் சிட்டி) உருவாக்கப்படும் என்று முதல்வர் ச.ஜோசப் விஜய் அறிவித்தார்.

i. இங்கு ஃபார்முலா 1 முதல் 4 வரையிலான பந்தயங்கள் நடைபெறும் என்றும் அவர் அறிவித்தார். பேரவையில் 110 விதியின் கீழ் அவர் வெளியிட்ட அறிவிப்பு:

- இருசக்கர, நான்கு சக்கர வாகன உற்பத்தியில் தமிழகம் ஒரு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. பல்வேறு வாகன உற்பத்தி நிறுவனங்கள், தங்களது புதிய வாகனத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு தமிழகத்தை, முதன்மை விருப்பமாகக் கருதுகின்றன.
- இந்தியாவில் மோட்டார் விளையாட்டு வாகன உற்பத்தியில் தமிழகம் ஒரு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இந்த மோட்டார் விளையாட்டு உற்பத்திப் பிரிவுகள் கோவையில் இயங்கி வருகின்றன. 'மெட்ராஸ் இண்டர்நேஷனல் சர்க்யூட்' சென்னைக்கு அருகில் இருங்காட்டுக்கோட்டையிலும், 'கரி மோட்டார் ஸ்பீடு வே' கோவையிலும், மோட்டார் பந்தயத்துக்கான முக்கியக் கட்டமைப்புகளாக உள்ளன.
- இந்தப் பந்தய அரங்கங்களில், தேசிய அளவில் எஃப்-3, எஃப்-4 கார் பந்தயப் போட்டிகள் நடைபெறுகின்றன. தற்போது மோட்டார் வாகனப் பந்தயத்திலும் தமிழகம் முன்னணி மாநிலமாகத்திகழ்கிறது. தமிழகம் வலுவான ஆட்டோமொபைல் உற்பத்திக் கட்டமைப்புகளைக் கொண்டுள்ளது.
- தமிழகத்தில் உலக அளவிலான மோட்டார் வாகன கார் பந்தய விளையாட்டுப் போட்டிகளுக்கான கார் உற்பத்தி ஆலைகளையும், அதற்குத் தேவையான உப தொழிற்சாலைகளையும் அமைக்கத் தேவையான சூழல் உள்ளது. உலகத்தரம் வாய்ந்த மோட்டார் வாகன கார் பந்தய அரங்குகளை அமைப்பதன் மூலம், சுற்றுலா, சிறப்பு வாகன உற்பத்தித் தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு, பொருளாதாரம் மேம்பட வாய்ப்புகள் ஏற்படும்.
- விளையாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்தவும், தமிழக இளைஞர்களிடையே மோட்டார் விளையாட்டுகள் மீதான அதிகரித்து வரும் ஆர்வத்தை

ஊக்குவித்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கி தமிழகத்தை சர்வதேச அளவிலான மோட்டார் விளையாட்டுகளின் முக்கிய மையமாக உருவாக்கவும், தமிழகத்தில் ஒரு புதிய மோட்டார் விளையாட்டு நகரம் உருவாக்கப்படும்.

- இந்த நகரத்தில் சர்வதேசத் தரத்திலான மோட்டார் விளையாட்டு பந்தயத்தடம் மற்றும் அதற்கான நவீன உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சி வசதிகள் ஏற்படுத்தப்பட்டு ஃபார்முலா 1, 2, 3, 4 போன்ற சர்வதேசத் தரத்திலான போட்டிகள் நடத்துவதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.
- இளைஞர்களின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் திறமைகளைக் கண்டறிந்து, பயிற்சி மற்றும் போட்டி வாய்ப்புகள் வழங்கி, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான வீரர்களை உருவாக்குவதுடன், விளையாட்டுச் சுற்றுலாவையும் மேம்படுத்தும் வகையில் மோட்டார் விளையாட்டு நகரம் அமையும் என்றார்.

6. சென்னையில் உலகத் தரத்துடன் கூடிய தமிழ்நாடு ஒலிம்பிக் நகரம் உருவாக்கப்படும் என்று பேரவையில் முதல்வர் ச.ஜோசப் விஜய் அறிவித்தார். பேரவையில் 110 விதியின் கீழ் அவர் வெளியிட்ட அறிவிப்பு:

i. தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் பிற சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளில் அதிக எண்ணிக்கையிலான பதக்கங்களை வெல்லும் வகையில், தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த 'தமிழ்நாடு ஒலிம்பிக் நகரம்' அமைக்கப்படும்.

ii. இந்த ஒலிம்பிக் நகரம், ஒலிம்பிக் தரத்திலான ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகமாக உருவாக்கப்படும். இதில் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு அரங்கங்கள், அதிநவீன விளையாட்டு உபகரணங்கள், உயர்தர செயல்திறன் பயிற்சி மையம், விளையாட்டு அறிவியல் மற்றும் விளையாட்டு மருத்துவ மையங்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான தங்குமிட வசதிகள் உள்ளிட்ட அனைத்து நவீன உள்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்படும்.

iii. இந்த வளாகம், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு, ஒலிம்பிக் பதக்கங்களை வெல்லக்கூடிய திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு உதவும் ஒருங்கிணைந்த விளையாட்டு மையமாகத் திகழும் என்றார்.

## 7. தமிழகக் கடற்கரைப் பகுதியின் வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம்

- சங்க இலக்கியங்கள் கடலுடன் ஆழமான பிணைப்பைக் கொண்டுள்ளன; அவை தமிழக நிலப்பரப்பை ஐந்து தனித்துவமான நிலத்திணைகளாகப் (ஐந்திணை) பகுத்து, கடலையும் அதைச் சார்ந்த கடற்கரை வாழ்வியலையும் "நெய்தல்" என்று வகைப்படுத்தியுள்ளன.
- தமிழக வரலாற்றில், கடல் என்பது வெறும் நீர்ப்பரப்பாக மட்டுமல்லாமல், வாழ்வாதாரத்திற்கான நுழைவாயிலாகவும், வலுவான வணிகப் பாதையாகவும், நாகரிக விரிவாக்கத்தின் தொட்டிலாகவும் திகழ்ந்துள்ளது.
- காலநிலை மாற்றத்தின் காரணமாக, இந்த முக்கிய புவியியல் சொத்து இப்போது கடுமையான பாதுகாப்புச் சவாலாக மாறி வருகிறது; பல ஆண்டுகளாக நிகழும் மில்லிமீட்டர் அளவிலான நில அரிப்பு, தீவிரமான கடல் சீற்றங்கள் மற்றும் கடல்நீர் உட்புகுதல் ஆகியவற்றால் இதன் நிலப்பரப்பு மெல்ல மெல்ல மாறி வருகிறது.

(i) உலகளாவிய கடல் மட்ட உயர்வுக்கான காரணங்கள் மற்றும் அதன் அளவு

- கிரீன்லாந்து மற்றும் அண்டார்டிகா போன்ற பகுதிகளில் உள்ள பிரம்மாண்டமான பனிப்பாறைகள் மற்றும் பனிப்படலங்கள் வேகமாக உருகுதல் மற்றும் வெப்பமடைவதால் கடல்நீர் விரிவடைதல் ஆகியவை முக்கிய காரணங்களாகும்.
- காலநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையேயான குழுவின் (IPCC) மதிப்பீடுகளின்படி, 1901-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை உலகளாவிய சராசரி கடல் மட்டம் சுமார் 20 செ.மீ உயர்ந்துள்ளது.
- பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றம் தொடர்ந்து அதிகமாக இருக்கும் சூழலில், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் கடல் மட்டம் கணிசமாக உயரும் என்று உலகளாவிய அறிவியல் சமூகம் எச்சரிக்கிறது.
- கடல் மட்டம் சில சென்டிமீட்டர்கள் உயர்வது சிறிய மாற்றமாகத் தோன்றலாம்; ஆனால் புயல்கள், ராட்சத அலைகள் மற்றும் கடற்கரை அரிப்பு ஆகியவற்றுடன் இணையும்போது அதன் ஆபத்து பலமடங்கு அதிகரிக்கிறது; இது கடற்கரைப் பகுதிகளில் ஏற்படும் அழிவுத் தாக்கத்தை வெகுவாகப் பெருக்குகிறது.

(ii) தமிழகக் கடற்கரைப் பகுதியில் ஏற்படும் கடுமையான உள்ளூர் பாதிப்புகள்

- சென்னை முதல் கன்னியாகுமரி வரை சுமார் 1,000 கி.மீ நீளமுள்ள பரந்த கடற்கரைப் பகுதியைக் கொண்ட தமிழகத்தில், மீன்பிடித்தல்,

துறைமுகங்கள், உப்பு உற்பத்தி, சுற்றுலா மற்றும் கடற்கரை சார்ந்த விவசாயம் ஆகியவற்றின் மூலம் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் இக்கடற்கரையுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது.

- தேசிய கடற்கரை ஆராய்ச்சி மையம் (NCCR) 1990 முதல் 2018 வரை மேற்கொண்ட ஆய்வில், ஆய்வு செய்யப்பட்ட தமிழகத்தின் 991 கி.மீ நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் 42.7% பகுதி பல்வேறு அளவிலான கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.
- திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் கடற்கரைப் பகுதி உள்வாங்குதல் (கடற்கரை நிலப்பரப்பு குறைதல்) கணிசமாகவும் கவலைக்குரிய வகையிலும் நிகழ்ந்துள்ளது.
- பின்வாங்கும் கடற்கரைப்பகுதி வெறும் மணலை மட்டும் அடித்துச் செல்வதில்லை; மாறாக, அது வீடுகள், உள்கட்டமைப்பு வசதிகள், கடற்கரைச் சாலைகள், விவசாய நிலங்கள் மற்றும் உள்ளூர் மீனவ சமூகங்களின் வாழ்வாதாரத்திற்கான முக்கிய ஆதாரங்களையும் அழித்துவிடுகிறது.

(iii) கடல்நீர் உட்புகுதல் மற்றும் சூழலியல் பாதிப்புகள் குறித்த அச்சுறுத்தல்

- கடலோரப் பகுதிகளில் நிலத்தடி நீர் அளவுக்கு அதிகமாக உறிஞ்சப்படுவது, நன்னீர் நிலத்தடி நீர்ப்படுகைகளுக்கும் கடலுக்கும் இடையிலான இயற்கையான சமநிலையைச் சீர்குலைக்கிறது.
- கடல் மட்ட உயர்வு இந்த நீரியல் அழுத்தத்தை தீவிரப்படுத்துகிறது; இதனால் கடல்நீர் நிலப்பகுதிக்குள் ஊடுருவி, குடிநீர் கிணறுகள் மற்றும் விவசாய நீர்ப்பாசன அமைப்புகளைச் சென்றடைகிறது.
- ஒரு காலத்தில் பயனுள்ளதாக இருந்த நன்னீர் கிணறுகள் உவர்ப்புத்தன்மை கொண்டவையாக மாறும்போது, அது ஒரு தனிப்பட்ட குடும்பத்தின் பிரச்சினையாக மட்டும் இருப்பதில்லை; மாறாக, அது ஒட்டுமொத்த கிராமப்புற சமூகங்களுக்கும் ஒரு பேரழிவுகரமான வாழ்வாதார நெருக்கடியாக உருவெடுக்கிறது.
- சென்னை போன்ற பெருநகரங்களில், கடல் மட்ட உயர்வு நகர்ப்புற வெள்ளப்பெருக்கின் தீவிரத்தை அதிகரிக்கிறது. பருவமழையின் கனமழை, கடல் அலைகளின் சீற்றம் மற்றும் வடிகால்கள் அடைபடுதல் ஆகியவை ஒரே நேரத்தில் நிகழும்போது, மழைநீர் வெளியேற முடியாமல் நகரின் உட்பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துகொள்கிறது.

- கடலோர சதுப்பு நிலங்கள் மற்றும் இயற்கையான நீர் வழித்தடங்கள் சுருங்குவதால் மழைநீர் கடலுக்குள் செல்வது தடுக்கப்படுகிறது; எனவே, சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பது என்பது வெறும் சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கை மட்டுமல்ல, அது நகரங்களுக்கான மிக முக்கியமான பாதுகாப்பு முதலீடு என்பதையும் இது உணர்த்துகிறது.

(iv) இயற்கையைச் சார்ந்த தணிப்பு உத்திகள்

- கடற்கரை நெடுகிலும் நீண்ட கான்கிரீட் தடுப்புச் சுவர்களைக் கட்டுவது ஒரு நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வு அல்ல; அதற்குப் பதிலாக, கடலின் இயல்புக்கு ஏற்ப அதனுடன் இணக்கமாக வாழ்வதற்கான அறிவியல் பூர்வமான உத்திகளை அரசு உருவாக்க வேண்டும்.
- பொதுவான மற்றும் ஒரே மாதிரியான கடலோரப் பாதுகாப்புத் திட்டம் மிகவும் பயனற்றது; மாவட்ட அளவிலான பொதுவான திட்டங்களுக்குப் பதிலாக, கிராமங்கள் மற்றும் குறிப்பிட்ட கடலோரப் பகுதிகள் வாரியாக ஆபத்து மற்றும் இடர் வரைபடங்கள் துல்லியமாகத் தயாரிக்கப்பட்டு அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டும்.
- பிச்சாவரம் மற்றும் முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகள் (mangroves), கடலோரச் சதுப்பு நிலங்கள், மன்னார் வளைகுடா பவளப்பாறைகள், மணல் மேடுகள் மற்றும் கடலோரப் பகுதிக்குரிய சிறப்புத் தாவரங்கள் உள்ளிட்ட இயற்கையான சூழலியல் பாதுகாப்பு அரண்களை அரசு தீவிரமாக மீட்டெடுத்துப் பாதுகாக்க வேண்டும்.

(v) அறிவியல் கருவிகள் மற்றும் கொள்கை ரீதியான நடவடிக்கைகள்

- மிகவும் புதுப்பிக்கப்பட்ட 'கடலோர மண்டல இடர் வரைபடங்களை' (Coastal Zone Hazard Maps) உருவாக்க, செயற்கைக்கோள்கள், புவியியல் தகவல் அமைப்புகள் (GIS) மற்றும் தொலை உணர்வு (remote sensing) தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கடற்கரை மாற்றங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.
- கட்டுமானப் பணிகள், இயற்கை அரண்களை உருவாக்குதல் மற்றும் அதிக ஆபத்துள்ள மண்டலங்களை வகைப்படுத்துதல் ஆகியவை அறிவியல் தரவுகளின் அடிப்படையில் கண்டிப்பாகக் கண்காணிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.
- மீனவர்களின் தலைமுறை தலைமுறையான பாரம்பரியக் கடல் அனுபவம் மற்றும் அவதானிப்புகள் ஆகியவை நவீனக் கடலோரப் பாதுகாப்புத்

திட்டங்களில் முறையாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

- கடலோரப் பாதுகாப்புக்கான நிதிச் செலவினத்தை வெறும் நிர்வாகச் செலவாகக் கருதக்கூடாது; மாறாக, எதிர்கால இயற்கை பேரிடர்களால் ஏற்படும் பேரழிவுகளைத் தடுப்பதற்கான மிக முக்கியமான பாதுகாப்பு முதலீடாக அதைக் கருத வேண்டும். மனிதர்களால் கடலை வெல்ல முடியாது என்பதால், அதன் செயல்பாட்டு முறைகளைப் புரிந்துகொள்ளவும், அதன் இயற்கையான தடுப்பு அமைப்புகளைப் பாதுகாக்கவும், மாறிவரும் அதன் சூழலுக்கு ஏற்ப மனிதக் குடியிருப்புகளை மாற்றியமைக்கவும் அவர்கள் அறிவியலைப் பயன்படுத்த வேண்டும்.

8. சென்னையில் ரூ.1,200 கோடியில் புதிய தலைமைச் செயலகம் கட்டப்படும் என்று முதல்வர் ச.ஜோசப் விஜய் அறிவித்தார்.

i. தற்போது தலைமைச் செயலகம் செயல்படும் புனித ஜார்ஜ் கோட்டையின் பாரம்பரியக் கட்டடங்கள் வரலாற்று மரபுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ii. பேரவையில் 110 விதியின்கீழ் அவர் வெளியிட்ட அறிவிப்பு: கிழக்கிந்திய கம்பெனியால் 1640- இல் சென்னையில் வணிகச் செயல்பாட்டு மையத்துக்காக வாங்கப்பட்ட நிலத்தில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு 1644-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது புனித ஜார்ஜ் கோட்டை. 1652-இல் பிரசிடென்சி நிலைக்கு உயர்த்தப்பட்ட பிறகு பிரிட்டிஷ் ஆட்சியின் அதிகாரபூர்வ தலைமையிடமாகத் திகழ்ந்தது.